**Tamilnadu Science and Technology Centre**
(Department of Higher Education, Government of Tamilnadu)
Gandhi Mandapam Road, Chennai - 600 025.

Office : 044 - 24410025
Direct : 044 - 24918787
Website: www.tnstc.gov.in
E-mail : tnstc.science@gmail.com

**Dr. S. Soundararajaperumal**, M.Sc.,Ph.D.,
Executive Director, I/C.,

கடிதஎண். 2110/P1/2021 நாள்.25.02.2022



பெறுநர்:

முதன்மைக் கல்விஅலுவலர்

மாவட்டம்

அன்புடையீர்!

பொருள்: தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம், சென்னை -25
புத்தாக்க அறிவியல் மானக் விருது – 2020-21 ஆம் ஆண்டிற்கான
மாநில அளவிலான கண்காட்சி(SLEPC) முடிவுகள் தொடர்பாக

வணக்கம்.

புத்தாக்க அறிவியல் மானக் விருது(INSPIRE MANAK AWARD) 2020-21 ஆண்டுக்கான மாநில அளவிலான கண்காட்சிகள் (State Level Exhibition and Project Competition-SLEPC) 2022 பிப்ரவரி 21 மற்றும் 22 ஆகிய நாள்களில் ஆனந்த் உயர் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனம், பழைய மகாபலிபுரம் சாலை, கழிப்பட்டூர் - என்ற கல்லூரியில் இணைய வழியில் நடைபெற்றது. 130 மாணவர்களின் கண்காட்சிப் பொருட்களை இணைய தளம் வழியாகப் பேராசிரியர்கள் நான்கு பேர் மற்றும் தேசிய புத்தாக்க நிறுவனத்தைச் சேர்ந்த இரண்டு அறிவியலாளர்கள் ஆகிய ஆறு பேரும் பார்வையிட்டு 13 மாணவர்களைத் தேர்ந்தெடுத்தனர். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களின் பட்டியல் மின்னஞ்சல் வழியாகவும், அஞ்சல் மூலமும் இணைத்து அனுப்பப்படுகிறது.

தேரந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் பற்றிய விவரங்கள் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்குத் தெரிவிக்கப்பட்டு, அடுத்து நடைபெறவிருக்கின்ற தேசிய அளவிலான கண்காட்சிக்குத் தயார் நிலையில் இருக்கும்படி அறிவுறுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன். இது பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

தங்கள் உண்மையுள்ள

சௌ. பெருமாள்
25.2.22
செயல் இயக்குநர்(பொ)

இணைப்பு: மாநில அளவிலான கண்காட்சியில்(SLEPC)
தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் பட்டியல்